RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21s316

OPEN ACCESS

# சிறுகதைகளில் கல்வி உளவியல்

சி. தமயந்தி [அ, *]

[அ] தமிழ்த்துறை, டோக் பெருமாட்டி கல்லூரி, மதுரை-625002, தமிழ்நாடு, இந்தியா.

# Educational psychology in short stories

C. Dhamayanthi [a, *]

[a] Department of Tamil, Lady Doak College, Madurai-625002, Tamil Nadu, India

* Corresponding Author: dhamayanthi@ldc.edu.in

Received: 20-03-2021
Revised: 17-08-2021
Accepted: 17-09-2021
Published: 30-10-2021

Check for updates

**ABSTRACT**

Childhood is like wax in human life. It is in this stage that a human being can be made a beneficiary of the basic characteristics and we can shape them just like giving the desired shape to the wax. The family and the institutional environment in which he learns must be conducive to the best development of basic characters in him. In these places it is essential that the relationship with the child should be uncomplicated, intimate and loving. Each individual's preferences, abilities, propensities, and family environment are different. If you know that and take care of your children accordingly and nurture them with good deeds, then those children will become incredibly successful in the way they want. S. Tamil Selvan said that when their ability and will are subjected to reprimand and punishment without knowing it and expecting results from them in their desired actions, it does not harm them at the individual level but creates psychological problems for their dependents as well. This article explains the short stories of Tamil Shelvan's 'Pathimoonil Onnu', Prabhanchan's 'Mari Enkira Attukutti' and 'Aisha' by R. Natarasan from the educational psychological point of view.

**Keywords:** Psychological Point, Childhood, Educational Psychology, Characters

## முன்னுரை

மழலைப்பருவத்தில் சிறுவன், சிறுமியரின் குறும்புத்தனங்களை மகிழ்வோடு கொண்டாடும் பெற்றோரும் மற்ற குடும்ப உறுப்பினர்களும் காலம் செல்லச்செல்ல அவர்களின் சேட்டைகளைக் கட்டுப்படுத்த இயலாது எப்போது பள்ளியில் சேர்க்கலாம் என்று துடித்துக்கொண்டு இருப்பர். அதற்குக் காரணம் பள்ளி என்பது அவர்களைப் பொறுத்த வரையில் குழந்தைகளை ஒழுங்குபடுத்தும் நிறுவனம். நன்மை தீமை, சரி தவறு எது என்பதை எடுத்துரைத்து நல்வழிப்படுத்தும் போதிமரம். பெற்றோர்களின் இந்நம்பிக்கை 80 சதவிகிதம் சரி என்றாலும்கூட சில நேரங்களில் ஆசிரியர்கள் பாடங்களைப் பயிற்றுவிப்பதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் பாடத்தைப் படிக்காதபோது வழங்கும் தண்டனைகளும் மாணவர்களின் உளத்தைப் பாதிக்கச்செய்து அவர்களைத் தடம்மாறச் செய்துவிடுகின்றன. ஒருபுறம் ஆசிரியர்களின் நடத்தைகளால் கல்விச் சூழலில் குழந்தைகளுக்குச் சிக்கல் ஏற்படுவதிருக்க மற்றொருபுறம் பெற்றோர்களின் அன்பற்ற நிலை, பெற்றோர்கள் இல்லாத நிலை, பெற்றோர்களின் பாலியல் பிறழ்வு நிலை, பிணக்குகளால் குடும்பம் சிதறிய நிலை, பொருளாதார ஏற்றத்தாழ்வு நிலை ஆகியனவும் குழந்தைகளைப் பாதித்துக் கல்வியில் அக்கறை செலுத்த முடியாத நிலையை ஏற்படுத்தி விடுகின்றன. இச்சூழல்களில் மாணவர்களின் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு அன்போடு அவர்களை அரவணைத்துக் கல்வி புகட்டும் ஆசிரியர்கள் அமைந்துவிட்டால் அவர்கள் பண்பட்ட நிலைக்கு மாற்றப்பட்டு சமூக ஒழுங்கை அடைந்துவிடுகின்றனர்

என்பதை ச. தமிழ்ச்செல்வனின் ‘பதிமூணில் ஒண்ணு’, பிரபஞ்சனின் ‘மரி என்கிற ஆட்டுக்குட்டி’, இரா. நடராசனின் ‘ஆயிஷா’ ஆகிய தமிழ்ச் சிறுகதைகள் படம் பிடித்துக் காட்டியுள்ளன. அவற்றைக் கல்வி உளவியல் நோக்கில் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தண்டனை வழங்கலும் மாணவர் உளச்சிக்கலும்

தண்டனைகளும் தண்டனைகளைப் பற்றிய அச்சமும் இன்றும் பள்ளிகளில் ஊக்குநிலைகளாக மேற்கொள்ளப்பெற்று வருகின்றன. அவை நன்மை பயக்கின்றவா? ஏன்றால் பெரும்பாலும் இல்லை என்ற கருத்தையே உளவியல் அறிஞர்கள் முன்வைக்கின்றனர். மனனம் ஆகவேண்டும் என்பதற்காக பாடப்பகுதியை பன்முறை எழுதவைத்தல், உருப்போட்டு ஒப்பிக்க வைத்தல், பிரம்பு கொண்டு அடித்தல், மண்டியிட வைத்தல், கடின வார்த்தைகளால் திட்டுதல் போன்ற பல்வேறு தண்டனைகள் வழங்கப்படுவதை தமிழ்ச்சிறுகதைகள் பதிவுசெய்துள்ளன. இவை தம்மை ஒத்த பருவத்தார் முன்னிலையில் வழங்கப்படுவதால் மனத்தவிப்பையும், அவமான உணர்வையும், தாழ்வு மனப்பான்மையையும் தண்டனை பெறுவாரிடத்தில் ஏற்படுத்துகின்றன. தண்டனை வழங்கும் முறையால் உளச்சிக்கலுக்கு ஆளான மாணவன் நிலையை பதிமூணில் ஒண்ணு என்ற சிறுகதையில் இடம்பெறும் நடராசன் என்னும் பாத்திரத்தின்வழி ச. தமிழ்ச்செல்வன் விளக்குகிறார். மேற்கண்ட சிறுகதையில் இடம்பெறும் நடராசன் மற்ற பாடல்களில் 70 முதல் 80 சதவிகித மதிப்பெண்களைப் பெறுகிறான். ஆனால் கணக்கு மற்றும் ஆங்கிலத்தில் ஒற்றை இலக்க மதிப்பெண்களைப் பெறுகின்றான். இப்பாடங்களில் மாணவன் குறைவான மதிப்பெண் எடுத்ததற்கான காரணம் என்ன என்பதை ஆசிரியர் ஆராயாமல் ‘என்பாடம் என்றால் உனக்கு அவ்வளவு இளக்காரமா?’ என்று புளிய விளாறையால் அடிக்கின்றார். ஆசிரியரின் இத்தண்டனைமுறையால் அஞ்சிய மாணவர்கள் ஊருக்குள் இவரைக் கண்டாலே தலை தெறிக்க ஓடுகின்றனர். மேலத்தெருவில் வசித்த ஆசிரியர் நடராசன் தெருவுக்கு வருவதில்லை என்றாலும் “என் பாடம்னா உனக்கு அவ்வளவு இளக்காரமா?” என்று கேட்டு அடித்த சம்பவம் அவன் மனதை அழுத்திக்கொண்டே இருந்தது. இதனால் அச்சமடைந்த நடராசன் இரவு முழுக்க கண்விழித்துப் படிப்பதும், தேர்ச்சி வேண்டிப் பிள்ளையாருக்குத் தோப்புக்கரணம் போடுவதும்? வேதக் கோயிலுக்குச் சென்று முழங்காலிட்டுச் ஜெபிப்பதுமாகக் காணப்படுகின்றான். தனது பிரச்சினையை எந்தச்சமயச் சாமியாவது அருள்கொண்டு தீர்த்துவிட்டால் போதும் என்று நினைக்கின்றான். ஆனால் வேண்டுதல் ஒன்றும் பலிக்காமல் போகவே மனஉளைச்சலுக்கு ஆளான நடராசன் ஒருமுறை கணக்குப்பேப்பரில் மனம் உருக தனது கணக்கு வாத்தியாருக்கு ஒரு கடிதம் எழுதினான். “வேண்டுமென்று நான் கணக்கில் பெயிலாகவில்லை. தன் குற்றம் இதில் எதுவுமில்லை. வச்சிக்கிட்டு நான் வஞ்சகம் செய்யவில்லை தெய்வமே, என்று அக்கடிதத்தை எழுதிக் கொண்டிருந்தபோதே வழிந்த கண்ணீர், எழுத்தின் மீது தெறித்து அக்கண்ணீரும் எழுத்தோடு பதிவாகியிருந்தது. ஆனால் அக்கடிதமும் கந்தசாமி சாரின் மனதைத் தொடவில்லை. மாறாக அவருக்கு ஆவேசம் மேலும் கூடி வெறி தலைவிரித்தாடியது. கணக்குப் போடுடான்னு சொன்னா ராஸ்கல் கதையா எழுதிக்கிட்டு இருக்கே … என்று கூட நாலு இழுப்பு இழுத்தார்.” (பதிமூணில் ஒண்ணு) என்பதின்வழி கணக்கு ஆசிரியரின் தண்டனை நடராசனுக்கு வன்மையான ஊக்கியாக அமைந்ததை உணர இயலுகின்றது. கணக்கு ஆசிரியரின் தண்டனைகளின்வழி நடராசனிடம் ஏற்பட்ட விளைவுகள் உளநூல் ஆசிரியர் ந. சுப்புரெட்டியாரின் கருத்தோடு இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

1. “தண்டனை தருவோரிடம் வெறுப்பையும் பகைமையையும் உண்டாக்குகின்றன.
2. பெரும்பாலும் உள்ளக்கிளர்ச்சியின் காரணமாக எந்தவிதமான கற்றலும் குழந்தையிடம் நேரிடாது போகக் காரணமும் உண்டு.
3. கற்கவேண்டிய பொருளைக் கற்பதிலிருக்கும் ஆர்வத்தைவிட எப்படியாவது தண்டணையிலிருந்து தப்புவதற்காகக் கற்கவேண்டும் என்ற எண்ணமே மீதூர்ந்து நிற்கின்றது.
4. மனக்கவலையால் விளையும் ஈர்ப்பின் காரணமாக சோர்வு அல்லது களைப்பு அதிகமாக நேரிடுகிறது (Subbu Reddyar, 1961).”

## சிதறிய குடும்பத்தால் கல்வி பாதித்தல்

“எதிர்பாராத விபத்து, மணமுறிவு, தந்தை அல்லது தாய் வீட்டிலிருந்து சென்றுவிடுதல் போன்ற வேளைகளில் குடும்பம் சீர்குலைந்து சிதறுண்டு விடுகிறது. குடும்பத்தின் ஒழுங்குமுறை கெடுகிறது. சிதறிய குடும்பத்தில் அமைதி குலைகிறது. ஏப்போதும் எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையின்மையும் கிலியுணர்ச்சியுமே தலைதூக்கி நிற்கின்றன” என்ற கூற்றிற்கேற்ப ‘மறி என்கிற ஆட்டுக்குட்டி’ சிறுகதையில் அற்புதமரி பாத்திரம் காணப்படுகிறது (Sanmugam, 1970). இவளின் தந்தை தாயைவிட்டு ஓடிவிடுகின்றான். சில காலங்களுக்குப் பின்னால் இவள் தாயும் தனக்கென ஒரு துணையை ஏற்படுத்திக் கொள்கின்றாள். இதனால் மரியைத் தனியே விட்டுவிட்டு அவள் தாய் புதிய துணைவனுடன் சென்றுவிடுவதும் பின் எப்போதாவது மகளைத்தேடி வருவதுமாகிய செயல்கள் மரியின் உளநிலையைப் பாதிக்கின்றது. இதனை “வீடா சார் இது…? வீடுன்னா அப்பா அம்மா இருக்கணும். அப்பா எப்பவோ போயிட்டார். போயிட்டாருன்னா செத்துப் போயிடலே. எங்களை விட்டுவிட்டுப் போயிட்டார். அம்மா என்னைச் சுத்தமாக விட்டுடலை. அப்பப்போ நாங்க சந்திக்கிறோம். சமயத்திலே இரண்டு நாளுக்கு ஒருமுறை நாங்க பார்த்துக்கொண்டால் அது அதிகம். அதனாலதான் இது வீடான்னேன். எனக்கு ஏதோ லாட்ஜிலே தங்கற மாதிரி தோணுது” என்ற மரியின் கூற்றால் அவளின் உளநிலை பாதிப்பு புலப்படுத்தப்படுகிறது. அற்புதமரி இதனால் பள்ளிக்குச் சரியாக வருகைதராமல் ஒவ்வொரு வகுப்பிலும் இரண்டாண்டுகள் பின்தங்கி தனது 18வது வயதில் பத்தாம் வகுப்புப் படிக்கின்றாள். பள்ளியின் ஒழுங்குமுறைகளைப் பின்பற்றாமல் தான்தோன்றியாக அலைகின்றாள். மேற்கண்ட குடும்பச்சிக்கல்களை அறியாத கல்வி நிர்வாகம் மரியின் நடத்தையில் காணப்படும் மாற்றங்களினால் அவள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து அவளுக்கு டி.சி. கொடுத்துவிடவேண்டும் என முயற்சிக்கின்றது. பள்ளியிருந்து அனுப்பப்பட்ட கடிதத்திற்கு விளக்கம் அளிக்காத பெற்றோர், வருகைப்பதிவும் ஒழுக்க நடவடிக்கையும் இல்லாத மாணவி என அவள்மீது புகார்கள் அளிக்கப்படுகின்றன.

இதற்கான காரணமாக “ஒவ்வொரு குழந்தையும் ஒரு குடும்பத்தில் உறுப்பினர்களாக இருந்து வருகின்றன. எனவே குழந்தைகளுக்குக் குடும்பந்தான் அடிப்படையான சமூகக் குழுவாக இருந்து வருகின்றது. குழந்தையின் நடத்தையிலுள்ள பிரச்சினைகளுக்கும் பெற்றோரின் நடத்தைகளுக்கும், மனப்பான்மைகளுக்கும் குழந்தையை அவர்கள் வளர்க்கும் பழக்கத்திற்கும் மிகுந்த தொடர்புகள் உண்டு என்பதற்கான சான்றுகள் அதிகரித்து வருகின்றன” என்ற கூற்றிற்கேற்ப மரியின் குடும்பச் சூழல் அவளின் கல்வியைப் பாதிப்பதை அவளின் தமிழாசிரியர் கண்டுகொள்கின்றார் (Rajamanickam, 1974). அவளின் பிரச்சினைக்கான காரணத்தை அறிய தன் மனைவியுடன் அவள் வீட்டிற்குச் செல்கின்றார். அன்பிற்கு ஏங்கி நின்ற அக்குழந்தை தன்வீடு தேடி ஆசிரியரே வந்ததை நினைத்துப் பெருமிதம் கொள்கிறது. அவ்வாசிரியர் அவள் பள்ளிச்செயல்களில் குறைபாடுடையதைச் சுட்டிக்காட்டாமல் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று உணவளிப்பதும் வெளியில் தன்மனைவியோடு அவளை அழைத்துச்செல்வதுமாகிய செயல்களை மேற்கொள்கின்றார். இதனால் தனது செயலுக்கு வருந்திய மரி தனது ஆசிரியரிடம் “சார் நான் ஸ்கூலுக்கு வர்றதே இல்லைன்னு நீங்க ஏன் கேட்கவில்லை?” என்று கேட்கின்றாள். மேலும் “என்னை நீங்க கேட்டிருக்கனும் சார். ஏண்டி ஸ்கூலுக்கு வரலைன்னு என்னை அறைஞ்சு கேட்கணும் சார். அப்படி யாரும் என்னைக் கேட்க இல்லேங்கறதுனாலதானே நான் இப்படி விட்டேத்தியா இருக்கேன்? என்மேல் இப்படி யாரும் அன்பு செலுத்தினது இல்லே சார். அன்பு செலுத்தறவங்களுக்குத்தானே அதட்டிக் கேட்கவும் அதிகாரம் இருக்கு?” என்று அவள் கூறுகின்றாள். அதற்கு ஆசிரியர் “உனக்கே அது தோணனும்னுதானே நான் காத்திருக்கேன். அதனாலே என்ன? ஒன்றும் முழுகிப்போய்விடவில்லை (Subbu Reddyar, 1961). இன்னைக்குப்புதுசா ஆரம்பிப்போம். இன்னைக்குத்தான் டென்த் கிளாஸ்லே நீ சேர்ந்தன்னு வச்சுக்க. நாளையிலேர்ந்து நாம் ஸ்கூலுக்குப் போறோம்” என்று கூறுகிறார். இதனை “வீட்டில் பெற்றோரின் அன்பையும் பள்ளியில் ஆசிரியரின் அன்பையும் நாடவேண்டிய நிலையில் இருக்கின்றான் சிறுவன். ஆகவே அவர்கள் அவனுக்காக இயற்றும் இன்பச்செயல்கள், அவனைக் கையாளும்முறை, அவனிடம் கொள்ளும் பொறுமை, அவனோடு ஆடும் விளையாட்டு, அவனது அச்சங்களைப் போக்கும்முறை, அவன் புண்பட்டால் அதனையாற்றும் வகை, அவன் வளர்ந்தபின் அவன் விடுக்கும் வினாக்கட்கு விடையிருக்கும்முறை,

அவனது செயலாக்கங்களுக்கும் கவர்ச்சிகளுக்கும் அவர்கள் காட்டும்வழி ஆகிய யாவுமே பயன் தருவன ஆகும்" என்று உளவியல் நூலாசிரியர் மாணவரிடத்து ஆசிரியர் நடந்துகொள்ளவேண்டிய முறையினை எடுத்துரைத்ததுபோல மரியின் ஆசிரியரின் அணுகுமுறை அமைந்ததால் மரி மனம் திருந்துகின்றாள் (Subbu Reddyar, 1961).

## மனப்பாடக் கல்வியும் மாணவர்களின் உளச்சிக்கலும்

"கண்டிப்பான பெற்றோர்கள், பாது காவலர்கள், ஆசிரியர்கள் தங்கள் விருப்பப்படி ஒழுக்க முறைகளைக் கடுமையாக அநாகரீகமாகக் குழந்தைகள்மீது திணித்து தங்கள் நெறிமுறைகளுக்கு ஏற்பக் கொண்டு வருவதில் வெற்றிபெற்றிடலாம் (Parimala, 1995)." ஆனால் அப்படிக் கண்டிப்பைக் காட்டும்போது குழந்தைகளின் உள்ளம் பாதிக்கப்படுகிறது. "இவர்கள் வெளித்தோற்றத்திற்கு அமைதியாகவும் நல் நடத்தையுடனும் எதிர்க்காத தன்மையுடனும் விளங்குவர். ஆனால் இவர்கள் மனத்தில் கடுமையான கோபவுணர்வு இருக்கும். அதனால் மகிழ்ச்சியற்று, பாதுகாப்புணர்வற்றுக் காணப்படுவர். ஆர்வத்தை, தனித்திறமையைக் கட்டுப்படுத்தி வளர்வர். அதுவே பாதுகாப்பின்மைக்கு இட்டுச் செல்கிறது" என்பர். இவ்வடிப்படையில் ஆயிஷா சிறுகதையில் காணப்படும் ஆயிஷா மனப்பாடக் கல்வியால் உளச்சிக்கல் அடைந்தவளாகக் காணப்படுகிறாள் (Parimala, 1995).

இச்சிறுகதையில் ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் புரியும்வகையில் பாடம் நடத்துவதை முதன்மையாகக் கொள்ளாமல் மனப்பாடம் செய்வதை மாணவர்களிடம் வற்புறுத்துகின்றனர். புரிந்து படித்து தமது கருத்துக்களை எழுதும் மாணவி ஆயிஷாவுக்கு மதிப்பெண் குறைத்து வழங்குகின்றனர். நோட்ஸில் உள்ளதை அப்படியே எழுதிவிடவேண்டும் என வற்புறுத்துகின்றனர். அதுகுறித்து ஆயிஷா கேட்டபொழுது அவளை ஆசிரியர்கள் கடுமையாக அடித்தனர். தன்னிடம் டியூசன் படித்த மாணவியருக்குச் சலுகையும் படிக்காதவர்களுக்கு கண்டிப்பும் காட்டினர். இதனை "ஆயிஷா யாரிடமும் டியூசன் படிக்காதவள் என்பதால் பழி வாங்கப்பட்டாள். வகுப்பிலும் கேள்விகள் கேட்டு குழப்பி விடுபவளாக இருக்கிறாள் அல்லவா? தொழிலைக் கடினமாக ஆக்குபவளை யார்தான் விரும்புவார்கள்? விரைவில் எனது போராளி தினமும் உதை வாங்கிவரத் தொடங்கினாள்" (ஆயிஷா) என்று கதைசொல்லியான இயற்பியல் ஆசிரியர் சுட்டுவது ஆசிரியர்களின் கண்டிப்புத்தன்மையையும் பொறுப்பின்மையையும் காட்டுகின்றது.

இக்கதையில் இடம்பெறும் ஆயிஷா காந்தவியல் கருத்துக்கள், குளியல் சோப்புக்கும் சலவை சோப்புக்குமான வேறுபாடு, விறகடுப்பு கேஸ் அடுப்பு வெப்பநிலை மாற்றம், பதினொன்றாம் வகுப்பு வீட்டுக்கணக்கைச் செய்தல், வரலாற்று ஆசிரியருக்கு சவாலாக இருத்தல் எனப் பல்வேறு நிலைகளில் மீத்திறன் அறிவைப் பெற்றிருந்ததால் ஒவ்வொரு நாளும் தண்டனை பெற்றுவந்தாள். இருப்பினும் அவளின் கல்வித்தேடல் குறையாமல் கூடிக்கொண்டே வந்தது. ஆசிரியர்களின் அடியைத் தாங்கிக்கொள்ள மறத்துப்போகும் ஊசியைக் கண்டுபிடித்ததாகக் கருதி முதலில் தவளைக்குச் செலுத்திப்பார்த்துப் பின் தனக்குச் செலுத்திக்கொள்கின்றாள். ஆனால் அவளின் முயற்சியில் தோல்வியடைந்து இறந்துவிடுகின்றாள் ஆயிஷா. ஆசிரியர்கள் மனப்பாடக் கல்வியில் காட்டும் கண்டிப்பு மாணவர்களின் திறனை வெளிக்கொணரவிடாததோடு, அவர்களின் உயிரையும் காவுவாங்கி பாதுகாப்பின்மைக்கு வித்திட்டதை இச்சிறுகதையின்வழி அறியமுடிகிறது.

## முடிவுரை

ஆசிரியர் மாணவர் உறவுநிலையில் தண்டனையின் மூலம் கல்வி கற்பித்தலை ஊக்கியாக மேற்கொள்வதைவிட மாணவர்களிடம் அன்பு காட்டல் மிகுந்த நன்மையைப் பயக்கும்மென்பதை சிறுகதைகள் பதிவுசெய்துள்ளன. அதுபோல குடும்பத்தில் பெற்றோர்களின் நெறியற்ற செயல்களால் குழந்தைகள் பாதிக்கப்படும்பொழுது அவர்கள் கல்வியில் பின்தங்கியிருப்பதற்கான காரணத்தை ஆசிரியர்கள் உளவியல்நோக்கில் ஆய்ந்து அதனைக் களைய முற்படுதலே நல்லாசிரியருக்கான இலக்கணம் என வலியுறுத்தப்படுகிறது. மேலும் கல்வி நிறுவனங்கள் மனப்பாடக் கல்வியை

வலியுறுத்தாமல் மாணவர்களின் சிந்தனைகளைத் தூண்டும்வகையில் பாடத்திட்டங்களை அமைத்துப் பாடம் நடத்தவேண்டும் என்பதையும் தமிழ்ச்சிறுகதைகள் வலியுறுத்துகின்றன. மேற்கண்ட மூன்று சிறுகதைகளும் கற்றல் கற்பித்தல் நிலையில் ஆசிரியர் மாணவர் உறவுநிலை எங்ஙனம் அமையவேண்டுமென்பதை கல்வி உளவியல் நோக்கில் பதிவுசெய்துள்ளமையை அறியமுடிகிறது.

## References

Parimala, S. (1995) Vasanthi novelkal or aaivu, Mathi Pathippagam, Madurai, India.

Rajamanickam, M. (1974) Ulaviyal Thuraikal, Tamilnadu Textbook and Educational Services Corporation, Chennai, India.

Sanmugam, T.A. (1970) Ulanalaviyal, Tamil Veeliyettu Kazhagam, Chennai, India.

Subbu Reddyar. N. (1961) Kalvi Ulaviyal, Vasan Company, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License